**தலைப்பு 325 – இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2020 யூன் 26 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தம்பர் 04 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

---

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக.

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.1(அ)(ஆ) பந்தியில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புகளின் பிரகாரம், முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அந்த தேவைப்பாடுகளிலிருந்து விலகிய சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சுற்றறிக்கையின் 7(V) ஆம் பந்தியின் பிரகாரம், சொத்துக்கள் கணிப்பிடப்பட வேண்டிய விதம் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், கணிப்பிடப்படாமையால் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ஏசீஏ-பீ இன் மொத்த சொத்துக்கள் மற்றும் மொத்த பொறுப்புகளுக்கிடையே ரூபா 299,675 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம், செயற்படுவதான் மூலம் நிதி நிலைமைக்கூற்று தயாரிக்கப்பட வேண்டும் என்பது. | கைத்தவறுதலால் தேறிய சொத்துக்களை கணிப்பிடும் போது, மொத்த சொத்துக்களில் வைப்புக் கணக்கின் மீதி கழிக்கப்பட்டிராததால் இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஏசீஏ – 2(i) நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம், மீளாய்வாண்டின் மூலதன சொத்துக்களை கைப்பற்றுதல் ரூபா 42,082,709 ஆக காணப்பட்ட போதிலும், அந்த பெறுமதி ஏசீஏ – 6 நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் கொள்வனவினால் கைப்பற்றப்பட்ட சொத்துக்களாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக நிதி நிலைமைக்கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி அந்த பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்கள், அதற்குரிய ஏனைய அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள தொகைகளுடன் ஒத்திருத்தல் வேண்டும். | அச்சீட்டுக் குறிப்புகளில் சொத்துக்களின் கீழ் ஆண்டின் இறுதி மீதியாக குறிப்பிடப்பட்டிருந்தது, ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட மீதியாகையால் அது தொடர்பில் அரச கணக்குகளி திணைக்களத்திற்கு அறிவித்து ஆண்டினுள்ளான கொள்வனவுகளை உள்ளடக்க முயற்சி செய்த போதிலும், கணக்குகளை தயாரிக்கும் திகதி வரையிலும், அந்த தவறுகள் திருத்தப்பட்டிருக்கவில்லை. எனவே திறைசேரியின் அச்சீட்டு பதிவுகளின் பிரகாரம், நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. |

### 1.6.2 காசுப்பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திரண்ட பரீட்சை மீதி (Consolidated Trial Balance) இன் பிரகாரம், கட்டுநிதி பெறுவனவுகள் ரூபா.323,170,000 தொகை, ஏனைய பெறுவனவுகள் ரூபா.3,613,274 மற்றும் பொது வைப்புப் பெறுவனவுகள் ரூபா.2,721,276 ஆகியன செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் உருவாகிய காசுப்பாய்ச்சலின் கீழ் தனித்தனியாக காண்பிக்கப்பட வேண்டிய | பெறுவனவுகள் உரிய முறையில் வகைப்படுத்தப்பட்டு உரிய மாதிரிகளில் அறிக்கையிடப்பட வேண்டியமை. | காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள தொகைகள் சரியானவை என்பதும், தவறுதலாக அட்டுறு அடிப்படையில் அவை வகைப்படுத்தப்பட்டுள்ளமையால், உரிய மாதிரிக்கமைய மீள சரியாக தயாரிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று இதனுடன் சமர்ப்பிக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், மேற்குறிப்பிடப்பட்ட அனைத்து கட்டுநிதி பெறுவனவுகளும் ரூபா.329,504,550 ஆன கூட்டுப் பெறுமதியாக காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட மற்றும் முதலீடு செயற்பாடுகளுக்காக காசு அடிப்படையில் செலவிடப்பட்ட பெறுமதி முறையே ரூபா 70,226,245 தொகை மற்றும் ரூபா 256,568,104 ஆக காணப்பட வேண்டிய போதிலும், காசுப்பாய்ச்சல்கூற்றினுள் அந்த பெறுமதிகள் அட்டுறு அடிப்படையில் முறையே ரூபா 71,116,960 மற்றும் ரூபா 258,387,590 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட பெறுமதி ரூபா 890,715 இனாலும், முதலீட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட பெறுமதி ரூபா 1,819,486 இனாலும் கூட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது.<br><br>மேலும், மீளாய்வாண்டிற்கான வைப்புக் கொடுப்பனவுகளான ரூபா 2,710,201 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது காசுப்பாய்ச்சல்கள் உரிய முறையில் இனங்காணப்பட்டு அறிக்கையிடப்பட வேண்டியமை. | காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள தொகைகள் சரியானவை என்பதும், தவறுதலாக அட்டுறு அடிப்படையில் அவை வகைப்படுத்தப்பட்டுள்ளமையால், உரிய மாதிரிக்கமைய மீள சரியாக தயாரிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று இதனுடன் சமர்ப்பிக்கப்படுகின்றது. |
| (இ) | காசுப்பாய்ச்சல் கூற்று (ஏசீஏ – சீ) இனுள் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட காசுப்பாய்ச்சலின் கூட்டுப்பெறுமதி ரூபா 71,655,117 ஆக இருக்க வேண்டிய போதிலும், அந்த பெறுமதி ரூபா 71,116,960 ஆக ரூபா 538,157 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றினை தயாரிக்கும் போது காசுப்பாய்ச்சல்கள் உரிய முறையில் இனங்காணப்பட்டு அறிக்கையிடப்பட வேண்டியமை. | காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள தொகைகள் சரியானவை என்பதும், தவறுதலாக அட்டுறு அடிப்படையில் அவை வகைப்படுத்தப்பட்டுள்ளமையால், உரிய மாதிரிக்கமைய மீள சரியாக தயாரிக்கப்பட்ட காசுப்பாய்ச்சல் கூற்று இதனுடன் சமர்ப்பிக்கப்படுகின்றது. |

**1.6.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம், திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்று உருவாக்கப்பட்டு பேணப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும், கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் செயற்திறன் தொடர்பில் காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் கட்டமைப்பினை செயற்திறனாக கொண்டுசெல்ல தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனடபதும், அந்த மீளாய்வுகள் எழுத்துமூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டதாக கூற்றுக்கள் கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் செறய்பட வேண்டியமை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம், துரதமாக உள்ளக கணக்காய்வுடன் இணைந்து நிதிக் கட்டுப்பாட்டுக்கான ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு, அதன் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தாழ்மையுடன் தெரிவிக்கின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

---

### 2.1 வைப்பு மீதிகள்

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 571 (3) இன் பிரகாரம், வைப்புச் செய்த திகதி முதல் 02 வருடங்களை கடந்த | காலாவதியான வைப்புக்கள் தொடர்பில் | கடலோரப் பாதுகாப்பு திணைக்களத்தினால் வெளிவாரி |

| | | |
|---|---|---|
| வைப்புகள், அரச வருமானத்திற்கு செலவு வைத்தல் அல்லது மீளச் செலுத்தல் வேண்டும். எவ்வாறெனினும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதி நிலவிய ரூபா 288,600 தொகையான காலாவதியான வைப்புக்கள் தொடர்பில் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | நிறுவனமொன்றினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சேவையொன்றுக்காக நிறுத்தி வைக்கப்பட்ட வைப்பொன்றாக இந்த தொகை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்காக உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், எதிர்காலத்தில் நி.பி.571(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக்கொள்கின்றேன். |

**2.2 வங்கிக் கணக்குகளை நடைமுறைப்படுத்தல்**

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வழங்கிய திகதியிலிருந்து 06 மாதங்களை கடந்த வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 232,218 தொகையான 08 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | தொடர்ந்தும் 06 மாதங்களை கடந்த கட்டளைகள் தொடர்பில் இறுதி நினைவுறுத்தற் கடிதங்கள் அனுப்பி, துரதமாக உரிய நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துக்கொள்கின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

### 3.1 செயற்திட்டங்களை நிறைவு செய்யாது கைவிட்டுவிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் ரோஹண நிறுவனத்தினுள் உயர் பயிற்சி மற்றும் நிர்வாக கட்டிடமொன்றினை நிரடதாணிப்பதற்காக ரூபா 30.09 மில்லியன் செலவிடப்பட்டு, பின்னர் 2017 யூலை 22 ஆந் திகதி முதல் செயற்திட்டத்தின் பணிகள் கைவிடப்பட்டிருந்தன. | புதிய செயற்திட்டமொன்றினை ஆரம்பிக்கும் போது அனைத்து விடயங்களையும் கவனத்திற்கொண்டு, உரிய திட்டங்களை தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டியமை. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம், வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்தினால் 2019 ஆம் ஆண்டிற்காக வருடாந்த செயலாற்றல் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த செயலாற்றல் அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**3.3 பெறுகைகள்**

---------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | டிரக் வண்டியொன்றின் டின்கரிங் மற்றும் பூச்சு வேலைகளை நிறைவேற்றிக்கொள்வதற்கான ஒப்பந்தம் ரூபா 777,000 தொகைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், வாகனத்தினை டின்கரிங் மற்றும் பூச்சு வேலைகளை மேற்கொள்வதற்கான ஆவணங்கள் மற்றும் பல்வேறு கோவைகளில் வாகனத்தின் பதிவு இலக்கம் பல்வேறு முறைகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | திணைக்களத்தினால் பேணப்படும் ஆவணங்களில் சரியான தன்மை தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டியமை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) | தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3.1 (அ) இன் பிரகாரம், பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகளின் கொள்வனவின் போது அனைத்து தொடர்புடைய செலவினங்கள் உள்ளடங்களாக மொத்தக் கிரய மதிப்பீடொன்று பெறுகை நிறுவனத்தினால் தயாரிக்கப்பட வேண்டும். எவ்வாறெனினும், மொத்தக் கியர மதிப்பீடொன்றினை தயாரிக்காது 15 சந்தர்ப்பங்களின் போது ரூபா 3,509,481 பெறுமதியான சொத்துக்கள் மற்றும் இருப்புக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | ஏற்பாடுகளின் பிரகாரம், பெறுகை நடவடிக்கைகளின் போது மொத்தக் கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட வேண்டியமை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சட்டரீதியான உரித்து சுவீகரிக்கப்படாத 1263.45 பேர்ச் பரப்பளவான 09 காணித்துண்டுகளில் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையிலும் ரூபா 82,158,588 தொகையான கிரயம் ஏற்பட்டிருந்தது. | குறித்த காணிகளின் உரித்தினை உரிய முறையில் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**3.5 நட்டங்கள் மற்றும் இழப்புகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வாகனமொன்றின் டின்கரிங் மற்றும் பூச்சு வேலைகளின் பெறுமதி ரூபா 777,000 இற்கு உரிய ஒப்பந்தத்தின் பணிகள் நிறைவு செய்யப்பட்டு, வாகனம் தாமதித்து வழங்கப்பட்டிருந்தமையின் காரணத்தினால் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் அறிவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணம் அறவிடப்படாது செலுத்தப்பட்டமையால் ரூபா 42,735 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது. | தாமதித்து வழங்கப்படும் கட்டளைகள் தொடர்பில் உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணத்தினை அறவிட்டு கொடுப்பனவுகளை செலுத்த வேண்டியமை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |

**4 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 03 முகாமைத்துவ உதவியாளர் பதவிகள் மற்றும் அலுவலக உதவியாளர் பதவியொன்றும் திணைக்களத்திற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டன. | அங்கீகரிக்கப்பட்டு வெற்றிடமாகவுள்ள பதவிகள் நிரப்பப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |